

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli


www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 15 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 09 – திங்கள்கிழமை 25 ஆகஸ்ட் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 15 : Thiruvalluvar Year - 2056 - Aavani 09- Monday 25 August 2025 - Madurai 16 Pages ₹ 5.00


# கல்வியை வளர்க்கும் காலை உணவுத் திட்டம்!

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று போற்றுகிறது பழந்தமிழ் இலக்கியம். அதனால்தான், பள்ளிகளில் குழந்தைகளுக்கு உணவு வழங்குவது என்பதை முக்கியமான திட்டமாக ஒரு நூற்றாண்டுக்கு முன்பே செயல்படுத்தியது திராவிட இயக்கமான நீதிக்கட்சியின் நிர்வாகத்தில் இருந்த சென்னை மாநகராட்சி மன்றம். அதன் தலைவராக இருந்த நீதிக் கட்சியின் நாயகர் திரு. பிட்டி. தியாகராயர் அவர்கள் 16-9-1920 அன்று மாணவர்களுக்கு உணவு வழங்கும் தீர்மானத்தை நிறைவேற்றி அதனடிப்படையில் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். பின்னர் அது, சென்னையின் மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்டது.



பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள பள்ளி மாணவர்களின் பசி தீர்க்கும் வகையில் மதிய உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஏழைக் குடும்பத்து மாணவர்கள் பெரும் பயனடைந்தனர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் அது சத்துணவுத் திட்டமாக மாற்றப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் முட்டையுடன் கூடிய நிறைவான சத்துணவுத் திட்டமா னது. மாணவர்களின் உடல்நலன் மேம்பட்டது. ‘பசியாத நல்வயிறு‘ என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிட்டது போல, பள்ளிக் குழந்தைகள் பசியுடன் இருக்கக் கூடாது என்பதற்காக மதிய வேளையில் உணவு வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முன்னோடி மாநிலம்.

**தனிமனித வருவாயிலும் பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேற்றம் கண்டுள்ள தமிழ்நாட்டில், பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லும் சூழல் நகர்ப்புறங்களில் மட்டுமின்றி கிராமப்புறங்களிலும்**

## உங்களில் ஒருவன்

**உள்ளது. அவர்கள் பணிக்குச் செல்லும் நேரத்தில், பள்ளிக்குச் செல்லும் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான அளவில்**



**காலை உணவை வழங்க முடியாத நிலையையும் பல இடங்களில் காண முடிந்தது. அதன் காரணமாக, காலை நேரத்தில் பள்ளிக் குழந்தைகள் உடல் சோர்வினால், படிப்பில் ஆர்வம் காட்ட முடியாத நிலையும்,**

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்




# தி.மு.க. முப்பெரும் விழாவில் விருது பெறுவோர்!

2025ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் கரூரில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவினையொட்டி ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற விருதுகளான

**பெரியார் விருது**

கழக துணைப் பொதுச் செயலாளரும் – கழக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான

**கனிமொழி கருணாநிதி** அவர்கட்கும்



**அண்ணா விருது**

தணிக்கைக்குழு முன்னாள் உறுப்பினரும் – பாளையங்கோட்டை நகர்மன்ற முன்னாள் தலைவருமான

திரு. **சுப.சீத்தாராமன்** அவர்கட்கும்



**கலைஞர் விருது**

நூற்றாண்டு கண்டவரும் – அண்ணாநகர் பகுதி முன்னாள் செயலாளரும் – அண்ணாநகர் சட்டப் பேரவைத் தொகுதி முன்னாள் உறுப்பினருமான

திரு. **சோ.மா.இராமச்சந்திரன்** அவர்கட்கும்



**பாவேந்தர் விருது**

கழக மூத்த முன்னோடியும் – தலைமைச் செயற்குழு உறுப்பினரும் – குளித்தலை ஒன்றியக்குழு முன்னாள் தலைவருமான

திரு. **குளித்தலை சிவராமன்** அவர்கட்கும்



**பேராசிரியர் விருது**

கழக ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவரும் – காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் – சட்டப்பேரவை முன்னாள் கொறடாவுமான

திரு. **மருதூர் இராமலிங்கம்** அவர்கட்கும்



**மு.க.ஸ்டாலின் விருது**

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட முன்னாள் செயலாளரும் – முன்னாள் அமைச்சருமான

திரு. **பொங்கலூர் நா.பழனிச்சாமி** அவர்கட்கும்



வழங்கப்படும்

**நாள் : 24.08.2025**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**